**செய்தி வெளியீடு எண் :381** **நாள்: 12.03.2022**

மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர்
திரு ஜெய்சங்கர் சுப்பிரமணியன் அவர்களை
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்
தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு நன்றி தெரிவித்தார்கள்

உக்ரைன் நாட்டில் சிக்கித்தவித்த தமிழக மாணவர்கள் உள்ளிட்ட இந்திய மாணவர்கள் அனைவரையும் பத்திரமாக மீட்டதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

இன்று விமான நிலையத்தில் உக்ரைன் நாட்டில் இருந்து திரும்பிய தமிழக மாணவர்கள் கடைசி குழுவினரை நேரில் வரவேற்ற முதலமைச்சர் அவர்கள் , அதன்பிறகு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் சுப்பிரமணியன் அவர்களிடத்தில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு தமிழக மாணவர்கள் அனைவரும் பாதுகாப்பாக திரும்ப நடவடிக்கை மேற்கொண்ட ஒன்றிய அரசுக்கும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கும் நன்றி தெரிவித்தார்கள் .

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**